# இலங்கையின் பொருளாதார நெருக்கடியும், குடியகல்வும்

அண்மைய ஆண்டுகளில், இலங்கையில் பொருளாதார நெருக்கடி மற்றும் புலம்பெயர்தல் போக்கு அதிகரித்து வருகிறது. இரண்டு காரணிகளும் நாட்டின் சமூக மற்றும் பொருளாதார நிலைமைகளில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன.

உலகப் பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள நெருக்கடியானது இலங்கையின் ஏற்றுமதியில் கணிசமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது, இது 2008ல் இருந்து மூன்றில் ஒரு பங்காக குறைந்துள்ளது. கூடுதலாக, வேலையின்மை விகிதத்தின் கூர்மையான அதிகரிப்பு வறுமை மற்றும் சமத்துவமின்மை அதிகரிப்பதற்கு வழிவகுத்தது. இது நாட்டின் சமூக மற்றும் பொருளாதார நிலைமைகள் மற்றும் அதன் மக்கள்தொகையில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

சமீப ஆண்டுகளில் குடியேற்ற விகிதம் கூட அதிகரித்துள்ளது. 2008 ஆம் ஆண்டில், இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்தவர்கள் 36,000 பேர். இந்த எண்ணிக்கை தற்போது ஆண்டுக்கு சுமார் 50,000 பேராக அதிகரித்துள்ளது. இந்த அதிகரிப்புக்கு முக்கிய காரணங்கள் பொருளாதார நெருக்கடி மற்றும் அதிக வேலையின்மை விகிதம்.

இலங்கையின் பொருளாதார வளர்ச்சி வீதம்

| ஆண்டு | வளர்ச்சி வீதம் |
| --- | --- |
| 2017 | 3.6 |
| 2018 | 3.3 |
| 2019 | 2.3 |
| 2020 | -3.6 |
| 2021 | -3.7 |

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியின் விளைவுகள் தெளிவாக உள்ளன. நாட்டின் ஏற்றுமதி குறைந்துள்ளது, இது வறுமை மற்றும் சமத்துவமின்மை அதிகரிப்பதற்கு வழிவகுத்தது. வேலையின்மை விகிதமும் அதிகரித்துள்ளது, இது நாட்டின் சமூக மற்றும் பொருளாதார நிலைமைகளில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. கூடுதலாக, குடியேற்ற வீதமும் அதிகரித்துள்ளது, இது நாட்டின் மக்கள்தொகையில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

வேலையின்மை வீதம்

| ஆண்டு | வேலையற்றோர் வீதம் |
| --- | --- |
| 2017 | 4.2 |
| 2018 | 4.4 |
| 2019 | 4.8 |
| 2020 | 5.5 |
| 2021 | 5.1 |

ஆதாரம் : இலங்கை தொகைமதிப்பு புள்ளிவிபர திணைக்களம்

புலம்பெயர்வு வீதத்தின் விளைவுகள் இலங்கையிலும் தெளிவாக உள்ளன. நாட்டின் மக்கள்தொகை குறைந்துள்ளது, இது நாட்டின் சமூக மற்றும் பொருளாதார நிலைமைகளில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. குடிஅகல்வு வீதமும் அதிகரித்துள்ளது, இது நாட்டின் மக்கள் தொகையில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

இலங்கையின் தொழிலுக்கு பங்களிப்போர் வீதம்

| ஆண்டு | வளர்ச்சி வீதம் |
|---|---|
| 2017 | 54.1 |
| 2018 | 51.8 |
| 2019 | 52.3 |
| 2020 | 50.6 |
| 2021 | 49.9 |

2017ம் ஆண்டில் 54.1 வீதமாக காணப்பட்ட வீதமானது 2021ல் 49.9 வீதமாக குறைவடைந்துள்ளது. இவ்வாறு குறைவடைந்தமைக்கான காரணமாக நாட்சம பொருளாதார நெருக்கடி மற்றும் குடியேற்ற விகிதம் மீது ஏற்படுத்திய சில விளைவுகளே இவை என குறிப்பிடலாம்.

பொருளாதார நெருக்கடி மற்றும் நாட்டில் வேலைவாய்ப்பு இன்மை மற்றும் நீண்டகாலமாக அரச தொழில் வாய்ப்புக்கள் வழங்கப்படாமை மேலும் அரச பணிகளில் உள்ள பணியாளர்களை 5 வருட விடுமறையில் வெளிநாடு சென்று தொழில் செய்வதற்கு வழங்கப்பட்டுள்ள வாய்ப்புக்கள் என்பவற்றினால் நாட்டை விட்டு வெளியேறுவோர் தொகை அதிகரித்து காணப்படுகின்றது.

வெளிநாட்டு தொழில் வாய்ப்புக்களை பெற்றுச் செல்வதன் ஊடாக நாட்டில் காணப்படும் அந்நிய செலாவணி பிரச்சினைக்கு தீர்வாக அந்நிய செலவாணிகளை ஈட்டும் வாய்ப்பு க்களும் தொழில் வாய்ப்புக்களை வெளிநாட்டில் பெற்றுக்கொள்வதனால் ஏற்படுகின்றது.

நாட்டை விட்டு மக்கள் வெளியேறு வதற்கான சான்றுகளாக இலங்கை கடவுச் சீட்டுக்கள் அண்மைய மாதங்களில் அதிகமாக வழங்கப்பட்டு ள்ளமையையும், புதிதாக கடவுச் சீட்டுக்களை பெற்றுக்கொள்வதற்காக இணையத்தின் ஊடாக முன்பதிவு செய்துள்ளவர்களின் எண்ணிக்கைகள் உறுதிப்படுத்துவதுடன், இதுவரை சட்டவிரோத கடல் பயணங்களின் மூலம் இந்தியாவிற்கு 222 பேர் வரையானோர் சென்றுள்ளார்கள் என்பதுடன், ஐரோப்பிய நாடுகளுக்கான சட்ட விரோத பயண படகுகள் தொடர்ச்சியாக சர்வதேச கடல் எல்லை களில் கண்டுபிடிக்கப்படுவதனையும் குறிப்பிடலாம்.

எஸ்.சுதர்சன்
புள்ளிவிபர உதவியாளர்,
மாவட்டச்செயலகம், யாழ்ப்பாணம்.






# வன்முறையே வாழ்வாகிப் போச்சு

கருவிலே உருவாகும் போதே கலைப்பதுவும்
உருவிலே கை சேர்ந்ததை மறைப்பதும் மறப்பதும் மரபாகி
சிறு வயது உரிமைகளை பறித்தெடுத்து பந்தாடி
மறு பொழுதில் மானுடம் பேசும் மந்தையரானோம்

கட்டிளம் பருவமதில் காளை போல் திமிருடன்
சுட்டித்தனமெல்லாம் சேர்ந்து சுதந்திரம் எனும் பெயருடன்
பேதையையும் போதையையும் நாடி வலைத்தள வலையில் சிக்கி
மேதையாய் வளரும் பயிரெலாம் வாளுடன் இராவணர்களாம்

வளங்களைச் சுரண்டி மண்ணையும் மரத்தையும் கடத்தி
உளங்களை நலப்படுத்த வழியின்றி வேலியே பயிரை மேய்ந்து
நியாயமது கேட்டிடில் நீட்டிடும் நாவும் கையுமாய்
உபாயமேதுமிலா உலக வாழ்வு வன்முறையின் வடிவாகிப்போச்சு

வீட்டிலும் நாட்டிலும் மண்ணிலும் விண்ணிலும் மலிந்து
ஊட்டி ஊட்டி வளர்த்தெடுக்கும் வரமாக இன்று வன்முறை
தாயென்று பாரார் தாரமென்று நாடார் உறவென்று அறியார்
சேயென்று நோக்கார் செய்வது வன்முறை என்னும் அறியார்

தாய்ப்பசுவை அறுத்திடுவார் தாலியையும் பறித்திடுவார்
மாய்த்திருவார் தன் இன்னுயிரை மாற்று வழி தெரியாமல்
பார்த்திருப்பார் செய்யும் வழியறியார் ஆப்பிழுத்த குரங்குகளைப் போல்
காத்திருப்பார் காலம் மாற கலி மாறி வாழ்வு மாறும் என்று

மெல்லிய உளமதிலே மேலான சிந்தனைகள் விதைத்து
வல்லிய எண்ணமெல்லாம் வாழ்வுக்கு ஆகாதென விளக்கி
உரமான உணர்வான வன்முறையே வாழ்வாகிப் போச்செனும் நிலைமாற்றி
வரமான இவ்வாழ்வை வளமாக வளர்த்தெடுக்க வாரீர்

திருமதி.மாலாதேவி மதிவதனன்
கிராம அலுவலர்,
பிரதேச செயலகம், தெல்லிப்பளை

உடைத்த சிரட்டைத் துண்டுகளுடன் இரவு பெய்த மழையில் நனைந்து ஊறிப்போன விறகுகளையும் ஒருவாறு உலரப்பண்ணி பன்னாடையையும் சேர்த்து அடுப்பை மூட்டிய பவளம், வாய் நெளிந்த பானையைத் தூக்கி அடுப்பில் வைத்தாள். அடுப்படிக்கு மேலே காட்டுத்தடிகள் கொண்டு வரியப்பட்ட பரணில் இருந்த சிறிய ஓலைப்பெட்டியை பக்குவமாய் எடுத்தவள் அதற்குள்ளிருந்த ஒரு சுண்டே அளவான அரிசியைக் கழுவி அடுப்பில் இருந்த பானையினுள் போட்டு அகப்பையால் கிளறிவிட்டாள். ஈரவிறகின் மகிமையால் எழுந்த புகைமண்டலத்தை விலக்கும் முயற்சியில் “ஊ…ஊவ்..” என அடுப்பை ஊதிவிட்டு நிமிர்ந்தவளின் கண்களில் இருந்து “பொல பொல” வென கண்ணீர் வழிந்தது.



# சர்க்கரைப் பொங்கல்

-திருமதி ஜெயப்பிரசாந்தி ஜீவகன்
அபிவிருத்தி உத்தியோகத்தர்,பிரதேச செயலகம்,மருதங்கேணி.

காதலித்துக் கரம்பிடித்த நிலவனுடன் அவள் வாழ்ந்த வாழ்க்கையில் கொண்டாடிக் களித்த பொங்கல் விழாக்களின் நினைவால் நெஞ்சம் கனத்தது. தோட்டப்புறத்திலும், வயலிலுமாய் நிலவன் பாடுபட்டு உழைத்துக் கொண்டுவர பவளமும் அநாவசிய செலவற்று சிறுகச் சிறுகச் சேமித்துக் கட்டிய அந்தப் பெரும் வீட்டு முற்றத்தில் சாணியால் தரைமெழுகி மாக்கோலமிட்டு நிறைகுடமும் குத்துவிளக்கும் மங்கலமாய்க் கொலுவிருக்க புதுப்பானையில் பால் பொங்கி நுரை ததும்ப சொந்த வயலில் அறுவடை செய்த புத்தரிசியில் பொங்கல் பொங்கி கரும்பும் பழங்களுமாய்ப் படையலிட்டு சூரியனை வணங்கி அண்டை அயலாருக்கெல்லாம் விருந்தளித்து மகிழ்ந்திருந்த அந்த நாட்களுக்குள் மீளவும் சென்றிட மனசு குழந்தையாய் அடம்பிடித்தது.

நிலவனுடன் புதுமனையில் குடிபுகுந்து முதற்பொங்கலைக் கோலாகலமாய்க் கொண்டாடி அடுத்த மாதமே எறிகணைகள் துரத்த இடம்விட்டு இடம்மாறி அலைந்து இறுதியில் படுகாயமுற்ற நிலவனை அகதிமுகாமில் வைத்துப் பராமரித்து சொந்த ஊர் மீண்ட போது அவர்களுக்கு மணமாகி ஐந்து வருடங்கள் கடந்திருந்தன. சொந்தமண்ணின் மகத்துவத்தால் நிலவனின் காயங்கள் குணமாகி அவன் பழைய நிலையை அடைந்த போது அவர்களிடம் குடிகொண்ட சந்தோசம் மீளவும் காணாமற்போகத் தொடங்கியது. “என்ன இன்னும் ஒரு விசேஷமும் இல்லையோ”

“என்னடி பவளம் உன்ர வயித்தில ஒரு புழு பூச்சியும் தங்கேல்லையோ?” என்கின்ற ஊராரின் கேள்விக்கணைகளால் பவளமும் நிலவனும் துடிதுடித்துப் போயினர். அதன்பின்னரான காலங்களில் உழைப்பது அனைத்துமே கோயில் குளங்களுக்கு அலைவதிலேயே கரைந்து போனது.. இப்படியே சில காலம் கழிய பவளத்தின் கண்ணீரும் கல்லாய் இருந்த கடவுளையும் கரைத்திட அவளின் வயிற்றில் கருவாய் உருவாகி வந்து பிறந்தவள்தான் நிலானி. தொடர்ந்து வந்த மூன்று வருடங்களும் நிலானியின் மழலைக் குறும்புகளுடன் மகிழ்வாய்க் கழிந்து போக கடந்த வருடம் காற்றுடன் கலந்து வந்த கொடிய “கொரோனாப்பேய்” காலனாகி நிலவனைக் கவர்ந்து சென்றுவிட கணவனற்ற பவளமும் தந்தையற்ற நிலானியும் நிர்க்கதியாகினர். திரும்பவும் புதுவீடு கட்டும் ஆசையில் அவர்கள் சேர்த்த காசெல்லாம் வைத்தியத்திற்கும் வயிற்றுக்குமாய் செலவாகிப்போக மீதிநாட்களில் அடுத்தவரின் வயல்களிலும் தோட்டப்புறங்களிலும் கூலிக்கு மாரடிப்பவளாய் மாறிப்போனாள் பவளம். கிடுகிடுவென உயரும் விலைவாசியேற்றமும், கடுகதியாய் பரவும் ஆட்கொல்லி நோயும் படாதபாடு படுத்திக் கொண்டிருக்க ஐந்தே வயதான பெண்குழந்தை நிலானியுடன் ஒருவேளை சோற்றுக்கே அல்லாடும் அவலம் தனக்கு வாய்த்ததை எண்ணி, எண்ணி மறுகினாள் பவளம்.

நினைவுகள் உளத்தை வருத்த ஈரவிறகின் புகை உடலை உலைக்க, கடந்த காலத்திலிருந்து விடுபட்ட பவளம் அடுப்பிலிருந்த உலைமூடியைத் திறந்து அங்கொன்றும் இங்கொன்றுமாய் சிதறியபடி அவிந்திருந்த சோற்றுப்பருக்கைகளை துழாவ முயல்கையில் “அம்மா…அம்மா..” என அழைத்தபடி ஓடிவந்த நிலானி “ஏனம்மா நாங்கள் முத்தத்தில பானை வச்சு பொங்கேல்ல..வெளிய ஒருக்கா வந்து பாருங்கோவன்.. விதுவாக்கள் வீட்ட எல்லாம் எவ்வளவு வடிவா கோலம் போட்டு புதுப்பானையில பொங்கியிருக்கினம்” என்றவாறு அவளின் சட்டையைப் பிடித்து இழுக்கத் தொடங்கினாள்.



பொங்கலுக்கு ஒருபிடி அரிசி கிடைத்ததே பெரிய புண்ணியமாய் இருக்கையில் புதுப்பானைக்கும் பொங்கற் பொருட்களுக்கும் அவள் எங்கே போவாள்? கடைகளில் சீனியை கண்ணிலயும் காட்டுகிறார்கள் இல்லை... சர்க்கரை கொஞ்சம் வாங்குவோமென்றால் மூடைக்கணக்கில் சீனியைப் பதுக்கிய முதலாளிமார் சர்க்கரையைக் கூட ஆனைவிலை, குதிரை விலை சொல்லும் போது பவளம் போன்ற அன்றாடங்காய்ச்சிகளின் வீட்டில் பொங்கல் என்பது வெறும் நினைவும் கனவும் தானே! இதையெல்லாம் அறியாக்குழந்தை நிலானிக்கு எப்படிப்புரியவைப்பது? தவமிருந்து பெற்ற மகளின் குறைந்தபட்ச ஆசைகளைக்கூட தன்னால் நிறைவேற்ற முடியாமற்போன தரித்திரத்தை எண்ணிக் கலங்கிய பவளம் " இப்ப கொரோனா தானே செல்லம்.. வெளிய வச்சு சமைக்கக் கூடாது.. வாங்கோ நாங்கள் உள்ள இருந்தே பொங்கல் சாப்பிடுவம்" என மகளைத் தேற்றியவள் காலியாகிவிட்ட சீனிப்பேணியில் நீர்விட்டுக் கழுவி அதைப் பொங்கல் பானையுள் ஊற்றிக் கிளறிவிட்டு பக்குவமாய் இறக்கி, தலைவாழை இலையை நிலவனின் படத்தின் முன்னால் வைத்து வெந்துபோன அந்த வெற்றுச் சோற்றுக் கரைசலை படையலிட்டு மகளையும் இருத்தி உண்ணத்தொடங்கிய போது துக்கம் தாளாது கண்கள் உடைப்பெடுத்து கன்னங்களில் நீராய் பாய்ந்தோடியது. எதிரே இருந்து தன் பிஞ்சுவிரல்களால் சோற்றை அளைந்த குழந்தை இவளின் கண்ணீரைப் பார்த்து என்ன நினைத்ததோ "அம்மா .. விதுவின்ர அம்மாக்கு வடிவா பொங்கத் தெரியாது போல.. அவேன்ர பொங்கல் சரியான கறுப்பா இருந்திச்சு, என்ர அம்மா எவ்வளவு அச்சா.. நல்ல வடிவா வெள்ளையா பொங்கியிருக்கிறா..." என கலகலத்து சிரித்தபடி சாப்பிடத் தொடங்கினாள். உணர்ச்சிப் பெருக்கில் மகளைக் கட்டியணைத்த பவளம் "அடுத்த வருசப் பொங்கலுக்கு பிள்ளைக்கு புதுச்சட்டையும் வாங்கி புதுப்பானையில நல்ல இனிப்பா சக்கரைப் பொங்கல் பொங்குவம்.." என குழந்தைக்கு சொல்வது போல் தன் மனதையும் திடப்படுத்தியவளாய் ஆசுவாசமுற்ற போது "எதிர்வரும் காலங்களில் அரிசியின் விலை ரூபா 500 ஐ எட்டலாம்.." என பக்கத்து வீட்டு தொலைக்காட்சியில் இருந்து வந்த செய்திக்குரல் பவளத்தின் செவிகளைத் துளைத்தது..



# தொ(ல்)லைபேசி

'அம்மா...அம்மா... அம்மோய்'

'என்னடி? ஏன் ஒப்பாரி வைக்குறாய்'

'கக்கா கழுவி விடு'

'உனக்கு கண்ட நேரத்திலதான் எல்லாம் வரும்... கொஞ்சம் பொறு வாறேன்' என்று அடுப்படியில் அரிசியை தண்ணீரில் கழுவி உலை வைக்க ஆயத்தமாகிக் கொண்டிருந்தாள் நிஷா.

மீளவும் 'அம்மா... அம்மா' என்று விடாப்பிடியாக கத்திக் கொண்டிருந்தாள் மூன்று வயது நிரம்பிய இனியா.

ஒரு கட்டத்தின் மேல் பொறுக்க முடியாதவளாய் 'என்னங்க காதுக்க பஞ்சா வச்சிருக்கீங்க... ஒருக்கா கழுவி விடுங்க... கத்திக் கொண்டு நிற்கிறாள்'

காதில் வாங்காதவனாக முகங் குப்புற படுத்திருந்தான் சிவா.





'என்னங்க... என்னங்க' என்று கத்திவிட்டு பதிலை காணாது' எல்லாம் சோத்து மாடுகள்... எனக்கென்று வந்து வாய்த் திருக்குதுகள்' என்று புறு புறுத்து சிவா நித்திரை போல பாசாங்கு செய்யும் இடத்திற்கு வந்து முதுகில் தட்டி' என்னங்க பகற் கனவு கண்டது காணும் எழும்பி அவளை கழுவி விடுங்க'

'சும்மா உமக்கு வேற வேலை யில்லை... நீர் போய் கழுவி விடும்'

'நீங்க உதுல சும்மாதானே கிடக்குறீங்க... ஒருக்கா கழுவி விடுங்களேன்'

'வழமையாக நீர் தானே கழுவுவீர்... இன்றைக்கு என்ன'

'அடுப்படில வேலையாக இருக்குறேன்... ஒருக்கா கழுவி விட பஞ்சியா உங்களுக்கு'

'இப்படி சொல்லுற நேரத்திற்கு போய் கழுவி இருக்கலாம்'

‘உங்களுக்கு கழுவி விடுறதுக்கு என்ன... ஊர் உலகத்துல போய் பாருங்க எவ்வளவு பேர் வீட்டு வேலையள் செய்கிறாங்க... நீங்கள் மட்டும் ஜமிந்தார் கணக்கில இருங்க’

‘சரி சரி ஏன் ஒப்பாரி வைக்குறீர்... உம்மை பார்த்து அவளும் பழகிட்டாள்’ என்று எழும்பினான்.

‘இஞ்ச வாங்கோ நான் என்ன ஒப்பாரி வைக்குறேன்... நீங்க முதலே போய் கழுவி இருக்கலாம் தானே... பிள்ளை பெற தெரியும்’ என்று இழுத்து கதையை நிப்பாட்டினாள்.

‘என்ன பிள்ளை பெறத் தெரியும் சொல்லி முடியுங்க’

‘அம்மா... அம்மா’ என்று இனியா கத்திக் கொண்டிருந்தாள்.

‘நில்லம்மா வாறேன்’ என்று சிவா சென்றான்.

‘அப்படியே குளிக்க வாத்தும் விடுங்கோ’



மகளை இரண்டு கக்கத்திலும் பிடித்து தூக்கி கொண்டு சென்று கழுவி... குளிக்க வார்க்க மூச்சுத் திணறி அழ வெளிக்கிட்டவளை ஏதேதோ சொல்லி ஒரு வழியாக சமாளித்து குளிக்கவார்த்தான்.

இப்ப புரியுதா உங்க மகளோட எவ்வளவு கஷ்டப்படுறன்’

‘இதுல என்ன கஷ்டம்’ என்று கொஞ்சம் திமிராக சொல்ல

‘சரி அப்போ மகளிற்கு நீங்களே குளிப்பாட்டுங்கோ’

சுதாகரித்தவனாக ‘சரி சரி கஷ்டம் தான் விடுங்க’ என்று மகளை துடைத்து ஆடையுடுத்தும் பணியை நிஷாவிடம் கைமாற்றினான்.

பெரு மூச்சு விட்டவனாக ரீவியின் ரிமோட்டை எடுத்து சண் மியூசிக்கிற்கு சனலை மாற்றி ஒரு இரண்டு செக்கன் கடந்திருக்கும் மீளவும் நிஷாவின் குரல்.

‘என்னங்க இப்ப ஏன் சனலை மாற்றினீங்க.. ஷீ தமிழில் விடுங்க’

‘உமக்கு எந்த நேரம் பார்த்தாலும் ட்ராமா’

‘இப்போ மாற்ற போறீங்களா இல்லையா’

காதில் வாங்காதவனாக பாட்டில் சிவா மூழ்க

‘விளையாடாம ஷீ தமிழில் விடுங்க”

நீர் அடுப்படிலதானே நிற்குறீர் பிறகு எப்படி ட்ராமா பார்ப்பீர்... பேசாமல் போய் சமையும்’

‘ட்ராமால போற கதையை கேட்டால் எனக்கு என்ன நடக்கு என்று புரியும் முதலில் மாத்துங்க’ என்று பலவந்தமாக ரீமோட்டை வாங்கி மாற்றிவிட்டு அடுப்படி சென்றாள்.



ரீவியின் முன் கொஞ்ச நேரம் இருந்தவனுக்கு ரீவியில் போகும் குடும்ப பிரச்சனைகளை பார்த்து ‘வீட்டிலதான் பிரச்சனை என்றால் இதுலையும்’ என்று ரீவியின் முன் இருந்து எழுந்தான்.

சேர்ட்டை அணிந்து அடுப்படி பக்கம் வந்து ‘நான் அம்மா வீட்ட போயிட்டு வாறேன்’ என்று சிவா கூறினான்.

சிவா கூறியதை கேட்டு கோபத்தோடு ஏறிட்டு பார்த்தாள் நிஷா...

அவளது பார்வையை கண்டு கொஞ்சம் பயம் கிலி கொள்ளச் செய்தாலும் அம்மா வீட்ட சென்றால்...

‘மாமாட்ட ரீமோட்டை கொடு’ என்று சொல்லும் தங்கையின் தாராள மனசும்’ ரீ குடிக்கிறியா, கஞ்சியில தேங்காய் பால் விட்டு தரவா, தேசிக்காய் கரைக்கவா’ என்று விழுந்து விழுந்து கவனிக்கும் அம்மாவின் பாசம் அவனுக்குள் அலை மோத,

‘இப்ப ஏன் இப்படி பார்க்குறீர்... சும்மாதானே இருக்குறேன் அது தான் ஒருக்கா போயிட்டு வருவமென்று சொன்னேன்’

‘நீங்கள் எதுக்கு போறீங்க என்று எனக்கு தெரியாத போல கதை விடாதீங்க... சும்மாதானே இருக்கீங்க இந்தாங்க இந்த தேங்காயை துருவுங்க’ என்று தேங்காயை கொடுத்தாள்.

‘எல்லாம் என் நேரம்... கொரோனா வைரஸ் வந்து வீட்டில் இருந்த கொஞ்ச நஞ்ச மரியாதையும் போட்டு... பள்ளிக்கூடத்த எப்ப தொடங்க போறாங்களோ’ என்று கூறி துருவலையை எடுத்து பேணியின் மேலே தலைகீழாக வைத்து துருவ ஆயத்தமானான்.

ஆம் சிவா பாடசாலையில் கற்பிக்கும் ஒரு ஆசிரியர். கொரோனா வைரஸ்ஸின் நீண்ட பாடசாலை விடுமுறையில் சிக்கித் தவிக்கும் பல இலட்சம் ஆசிரிய கணவன்களில் இவனும் ஒருவன்.

நிஷா அடுப்படி வாசலில் நின்று ட்ராமாவை பார்ப்பதும் சமைப்பதுமாக இருந்தாள்.

'இஞ்ச நீர் போய் ட்ராமாவை பாரும் நான் சமைக்கிறேன்' என்று சிவா கூறினான்.

'நீங்க அப்படியே சமைச்சிட்டாலும்'

'ஏன் எனக்கு சமைக்க தெரியாதோ... எங்க அம்மாவை கேட்டு பாரும்... நான் சமைப்பனோ இல்லையோ என்று'

'உங்க அம்மா உங்கள விட்டுக் கொடுப்பாவோ... என்னை கல்யாணம் கட்டும் வரை உங்களுக்கு உள்ளுக்குள் போடும் உடுப்புக்களையும் தோய்ச்சு தந்து சோம்பேறி பத்த வைச்சது அவாதானே'

நிஷாவின் வார்த்தைகள் சிவாவிற்கு தர்மசங்கடமான நிலையை உருவாக்கினாலும் 'அம்மா என்ர உடுப்புகளை நான் தோய்க்கிறேன் என்றாலும் உனக்கு ஒழுங்காக தோய்க்க தெரியாது' என்று வலிந்து தோய்க்கும் தாயின் பாசம் அவனை கண்ணீரில் நனைத்தது.

சிவாவின் கண்கள் இலேசாக கலங்குவதனை கண்ட நிஷா சமாளித்தவாறு 'என்னங்க உப்பு காணுமா என்று பாருங்கள்' என குழம்பினை அகப்பையில் கிள்ளி கொடுத்தாள்.



குழம்பினை நாக்கில் சுவை பார்த்த சிவா ஓங்காலித்தவாறு' இன்னும் கொஞ்சம் உப்பை போட்டிரு க்கலாமே' என்று கூற

'ஏன் உப்பு கூடிட்டோ'

'ட்ராமாவை பார்த்து பார்த்து சமைச்சா இப்படித்தான்'

'ஒருக்கா தானே போட்டேன்'என்று கூறி சிவா கூறியதை நம்பாதவளாக தான் குழம்பை நாக்கில் வைத்து உப்பை மறந்து போய் திரும்ப திரும்ப போட்டதனை எண்ணினாள்.

'நல்ல சாப்பாடும் கறியும்' என்று சிவா நக்கலாக கூறினான்

'ஏன் உங்களுக்கு மற்றும்படி வடிவா சமைச்சு தாரலையோ... இப்ப என்ன கொஞ்ச தேங்காய் பாலையும் புளியையும் கரைச்சு விட்டால் உப்பு உவர்ப்பது தெரியாது தானே'

'இப்படித்தான் தினமும் சமைக்குறீர் போல' என்று கூறி அடுப்படியில் இருந்து நழுவினான்.

ரீவியின் முன்பாக உள்ள ஷோபாவில் அமர்ந்து இனியா கலர் அடித்து விளையாடிக் கொண்டிருந்தாள். இனியாவிற்கு அருகே சென்று கலர் அடிப்பதனை பார்த்துக் கொண்டிருந்தான்.

சிறிது நேரத்தின் பின்... சிவாவின் தொலைபேசி சிணுங்கியது.

தொலைபேசியை எடுப்பதற்காக எழும்பியவன் நிஷா வருவதனை கண்டு' இஞ்ச அந்த போனை எடுத்து தாங்க' என்று கூறினான்.



'துரைக்கு போனை எழும்பி எடுப்பதற்கு கூட பஞ்சி' என்று கூறி போனை யார் போன் எடுக்கிறாங்க என்று கண்களால் ஸ்கான் செய்தாள்.

மாதவி ரீச்சர் என்று போனில் விழுவதை கண்டு போனை அவுட் ஸ்பீக்கரில் விட்டு ஆன்சர் பண்ணி சிவாவின் கைகளில் கொடுத்து அருகில் அமர்ந்தாள்.

போனை வாங்கிய சிவா அவுட் ஸ்பீக்கரில் இருப்பதனை தெரியாது 'மாதவி ரீச்சர் இப்ப ஏன் எடுக்கிறாங்க' என்று எண்ணி 'ஹலோ' என்றான்.

'ஹலோ சேர்.. எங்களை மறந்திட்டீங்களோ... ரீச்சர் ரீச்சர் என்று பள்ளிக் கூடத்தில் பின்னால திரிவீங்க இப்ப ஒரு கதையும் இல்லாமல் இருக்குறீங்க'

அவுட் ஸ்பீக்கரில் ஒலித்த மாதவி ரீச்சரின் குரலை கேட்டு சிவாவின் மனம் பகீரென்றது.

நிஷாவின் வெண்நிற முகம் மெல்ல சிவக்கத் தொடங்கியது....

அதனை அவதானித்த சிவா, மெல்லத் தடுமாறியவாறு 'அப்படி யில்லை ரீச்சர் வீட்டில வேலை களோடு பொழுது போகுது'

'பார்ரா! சேர் வேலையெல்லாம் செய்றார் வீட்டில' என்று கூறி 'எனக்கும் வீட்டில இருக்குதே தண்டத்துக்கு' என்று தனது கணவனை எண்ணியவாறு புறு புறுத்தாள் மாதவி ரீச்சர்.

கதையை தொடர்ந்து வளர்க்க விருப்பம் இல்லாதவனாக 'ஏதும் அலுவலாக அடிச்சீங்களோ ரீச்சர்?'

'இல்லை சேர்... வீட்ட இருப்பதால பொழுதும் போகுதில்லை... உந்தாளும் எப்ப பார்த்தாலும் சண்டை பிடிச்சுக் கொண்டு இருக்கு... உங்களோட பேசினா கொஞ்சம் மைன்ட் ரிலாக்ஸா இருக்கும்'.

'உந்தாள்' என்று தன்ர கணவனை தான் கூறுகிறாள் என்பதனை புரிந்து... ' இதைவிட தன்ர மனைவி

கொஞ்சம் பரவால்ல' என்று சிவா மனசிற்குள் நினைக்க...

சிவாவின் ஒரு பக்கத் தொடையில் நிஷா விரல்களால் நுள்ளினாள்.

'அ..ஆ' என்று மெல்ல கத்த... வாயில் விரலை வைத்து 'உஸ்' என்றாள் நிஷா.

'உங்கேளாட பேசினா மைன்ட் ரிலாக்ஸா இருக்கும்' என்று மாதவி ரீச்சர் சொன்னதன் எதிர்விளைவுதான் இது என்பதனை புரிந்தான்.

சிவா குரலினை கேட்ட மாதவி ரீச்சர் 'என்ன சேர்... ஏதும் கடிச்சிட்டா'

'இல்லை... இல்லை, அது மகள் காலில் மிதித்துவிட்டா' என்று சமாளித்தபடி... அழைப்பை துண்டிப்பதற்காக 'சரி ரீச்சர் அப்புறம் என்ன' என்று வாயெடுக்க...

'சரி சேர், இப்பவும் உங்களோட மனைவி சண்டை பிடிக்கிறாங்களா... இல்லாவிட்டால் சந்தோசமாக இருக்கீங்களா' என்று கேட்டாள்.

அதுவரை கோபத்தை கட்டுப்படுத்திக் கொண்டிருந்த நிஷா... கோபத்தின் உச்சக் கட்ட எல்லைக்கு சென்று... சட்டென்று எழுந்து ஷோபாவிலிருந்த தலையணையால் இரண்டு மூன்றுதரம் சிவாவின் மேல் அடித்துவிட்டு நகர்ந்தாள்.

'இன்றைக்கு யார் முகத்திலை முழித்தனோ தெரியல' என்று எண்ணி யவாறு 'கடைசியா நீங்க என்ர குடும்பத்தை பிரிக்க போறீங்க ரீச்சர்' என்று சிவா கூற.

'ஹாஹா' என்று சிரித்தபடி 'ஏன் சேர்' இப்படி சொல்லுறீங்க.

'இல்லை நான் சும்மா பகிடிக்கு சொல்லுவதை எல்லாம் நினைவில் வைச்சு கேட்குறீங்க'

'தெரியும் சேர்... சும்மாதான் கேட்டேன்' என்று கூறி 'ஹாஹா' என்று சிரித்தாள்.

'சரி ரீச்சர் நான் பிறகு எடுக்கிறேன்' என்று கூறி அழைப்பை துண்டிக்கவும்...

சமையலறையில் பாத்திரங்கள் விழும் சத்தம் பலமாக கேட்க...

'சரி பூகம்பம் கிளம்பீட்டு' என்று சிவா எண்ணி, 'இனியா ஏன் பாத்திரங்களை விழுத்துறீர்' என்று நிஷாவை கேட்பது போல் கேட்டான்.

'அப்பா... நான் இல்லை அம்மாதான்' என்று மழலை மொழியால் கூறுவதனை கேட்டு எழுந்து சென்றான்.

சமையலறை இரண்டு மூன்று பாத்திரங்கள் வேணுமென்றே போடப்பட்டிருப்பதனை கண்டு, அதை பாத்திரங்கள் வைக்குமிடத்தில் எடுத்து வைத்தான்'

அதே பாத்திரத்தை நிஷா எடுத்து

கீழே படாரென்று போட


‘உங்களுக்கு என்ன பிரச்சனை மேடம்’
‘எனக்கு ஒரு பிரச்சனையும் இல்லை சேர்… நீங்க யாரோடையும் நல்லா கொஞ்சிப் பேசுங்க’

‘ரீச்சர் எடுத்ததுதான் இப்ப உமக்கு பிரச்சனை போல’

‘எனக்கும் ஒரு பிரச்சனையும் இல்லை… நீங்க நல்லா எல்லாருக்கும் சொல்லித் திரியுங்கோ நான் உங்கள கொடுமைப்படுத்துறன் என்று’

‘ஐயோ அது சும்மா பகிடிக்கு கதைச்சாங்க நிஷா… புரிஞ்சு கொள்ளுங்க’
‘ஓ… எனக்கு புரிஞ்சுக்க தெரியாது சேர் நீங்க புரிஞ்சு கொள்ளுறவங்க ளோடையே குடும்பம் நடத்துங்க’

தொடர்ந்து கதைச்சா ஏட்டிக்கு போட்டியாக கதை போகுமென்று புரிந்து ’உர்’என்ற முகத்தோடு வெளியே சென்றான்.



சமையல் பாத்திரங்களை எல்லாம் பாத்திரம் கழுவும் இடத்தில் பளார் பளார் என்று போட்டு…

‘எல்லாம் என்ர தலைவிதி… கல்யாணம் ஒன்றை கட்டி நான் படுற பாடு’ என்று புலம்பினாள்.

அப்போது தான் அம்மா சொன்னது அவளுக்கு நினைவிற்கு வந்தது

‘நிஷா… ஒரேயொரு பொம்பிள பிள்ளை… அவள் தகப்பனுக்கு எப்போதும் செல்லப் பிள்ளை என்பதால அவளுக்கு நினைச்ச தெல்லாம் வாங்கி கொடுப்பதில் மணியத்தாருக்கு ஒரு ஆத்ம திருப்தி’

சிவசுப்பிரமணியம் இவரது முழுப் பெயராக இருந்தாலும் மணியத்தார் என்று ஊரில இருப்பவங்க கூப்பிட்டு அதுவே அவர் அடையாளமாக மாறியது. ஊரை சுற்றி நாலைந்து கடை… ஏக்கர் கணக்கில் வயல் காணிகள்… தென்னந்தோப்புகள் இப்படி ஊரில விசாலமான ஆள்தான் இந்த மணியத்தார்.

என்னதான் வசதியாக இருந்தாலும் குடும்பத்திலும் அதைவிட மகளிலும் கொள்ளைப்பிரியம் எப்போதும் அவருக்கு இருக்கும்

கேட்கிறதெல்லாம் கிடைக்கிற தாலையோ என்னவோ படிப்பில் கொஞ்சம் மந்தகதி நிஷா. அதை மணியத்தார் பெரிய குறையாக பார்த்ததும் இல்லை…

ஊரில நிறைய சொத்து இருக்கு எல்லாம் பிள்ளைக்குத்தானே என்று அடிக்கடி மனைவிக்கு கூறி யுமுள்ளார்.



'நீங்க நல்லா செல்லத்தை கொடுங்க... போற இடத்தில அவள்தான் கஷ்ட பட போறாள்... படிப்பும் இல்லை வீட்டில ஒரு வேலையும் செய்யுறதும் இல்லை' இது நிஷாவிற்கு கிடைக்கும் தாயின் வாடிக்கையான மந்திரம்.

எனினும் அவளும் மணியத்தாரும் அதெல்லாத்தையும் பொருட்படுத்துவ தில்லை...

ஒரு வேலைகாரனை வீட்டில வைச்சிருந்தா போச்சு' என்று தாயை சீண்டும் வகையில் நிஷா கூறி தாயின் வாயை அடைத்து விடுவாள்.

காலங்கள் ஓடியது... நிஷாவிற்கு மாப்பிள்ளை பார்க்கும் படலம் தொடங்கியது... எல்லா பெற்றோரையும் போல படித்த பொடியனா, குடிக்காத பொடியனா தேடி அழைந்து ஒரு வழியாக சிவாவை கரம் பிடித்துவைக்கப்பட்டது.

'சிவா எப்போதும் நிஷாவிற்கு நேர்மாறு... வறுமையோடு வாழ்ந்து, வாழ்க்கையோடு போராடி கொஞ்சம் வசதியாக வந்தவன்... திருமணம் கட்டிய ஆரம்பத்தில் எல்லா தம்பதிகளுக்குள்ளும் வரும் சின்ன சின்ன சண்டைகள், கோபங்கள் வந்து போனது.... ஒரு கட்டத்தில் நிஷாவை புரிந்து கொண்டு தன்னை மாற்றிக் கொண்டான்.



ஆனால் தன்னுடைய குடும்பத்தில் மகளுக்காக வக்காலத்து வாங்கும் மணியத்தாரோடு ஏற்பட்ட மனஸ்தாபத்தில் தனியே நிஷாவை அழைத்து வந்து சிறிய வீடாக இருந்தாலும் மகாராணி போல பார்த்தான்.

எனினும் அவளுடைய பிடிவாதம் குறைந்ததாக இல்லை... அதனையும் அவன் மெல்ல இரசிக்காமலும் இல்லை....

பெருமூச்சு விட்டு... நினைவலையிலிருந்து மீண்டு பாத்திரங்களை அலசி முடித்து நேரத்தை பார்த்தாள்

நேரம் மதியம் இரண்டு மணி

‘இனியா எழும்பி சாப்பிடு’ என்று மறைமுகமாக சிவாவிற்கு கூற… சிவா கேட்டும் கேட்காதவனாக மடிக் கணினியில் மூழ்க…

வேற வழியில்லாமல் பாத்திரத்தில் சாப்பாட்டை போட்டு வந்து அவனருகே அமர்ந்து முகத்தை சுழித்தவாறு சாப்பாட்டை குழைத்து அவன் வாயில் ஊட்ட… தூரத்திலிருந்த இனியா அம்மா எனக்கும் என ஓடி வந்தாள்.

அப்போது நிஷாவின் அருகேயிருந்த சிவாவின் தொலைபேசி அலறத் தொடங்க, அதனை எடுத்து யார் எடுக்கிறாங்க என்பதை கண்களால் ஸ்கான் செய்தாள்.

அது மலர் ரீச்சர் என்றிருந்தது!!!

முற்றும்.

நவா.



# என்னடா நடந்தது பொடியா! என்னத்தை தேடுகிறாய்?

தேடுகிறேன் திரைமறைவில்
நடந்ததை நடக்கிறதை
குனிந்தது போதும் குமரா
நிமிர்ந்து பார் மனிதம் எங்கே
நின்று பார் நீ தானோ என்று
சொன்னது சரிதானே தமிழில்
சொல்வதும் சரிதானே
நிலை கெட்ட மானிடா
தலை பட்ட பாடு தெரியுமோ
கூடிக் குடிக்கிறாய் கூத்தடிக்கிறாய்
கூனிக் குறுகி குனிந்து நிற்கிறாய்
உலகம் உருண்டை தானே
சுத்திச் சுழன்று வரும் ஓ
தத்துவம் வரும் தானே கொஞ்சம்
யோசி
பிஞ்சுக் குழந்தையை பிரிந்த தாய்
ஏணையில் பிள்ளை பானையில்
சோறு
படியில் விழுந்தது செல்
பதறிப் போனாள்
பாவிமகள் பாத்திருக்க பார்த்தன்
உயிர் பிரிந்தது
மழையாய் பொழியும் தீக்குழப்புகள்
கலிபரின் கலியுகத்து ஓசைகள்
மழலையின் மொழி கேட்டதா
யாருக்கும்
யாருமே இல்லை பிஞ்சுக்
குழந்தையின் குரல் தோற்றுப்போகும்
காது பட்ட பாடு ஐயகோ!
நெஞ்சு படபடக்குதே நிலைகெட்ட
மானிடனே

கதியிழந்து கதிகலங்கி குப்புற
விழுந்தாள்
யுத்தபூமி களைந்து விழுந்த தாய்
திரும்பி பார்க்கிறாள் ஒரே
புகைமண்டலம்
தலையை பிய்க்கிறாள் தரையில
விழுகிறாள்

கண் முன்னே கதறக்கதறக்
கொடுமைகள்
தலைவிரித்தாடுகின்றாள் கொஞ்ச
நாளில்
அவளுக்கு விசர் இன்னுமோர்
பட்டம்
எங்கே மனிதம் எங்கே சமத்துவம்
எங்கே சகோதரத்துவம்
பத்து மாதக் குழந்தை என்ன
பாவம் செய்தது
பாலூட்ட தாய் இல்லை
தாலாட்ட தந்தையும் இல்லை
தத்தெடுக்க யாரும் இல்லை
கொழுந்து விட்டெரியும்
கொடுமையில்
இரகசியம்
எவகே மனிதன் எங்கே மனிதன்
தேடிப் பார்க்கின்றேன்
பொடியா தேடிப் பார்க்கின்றேன்

திரு.இ.கருணாநிதி (M.S.O.I) (B.A)
பதிவாளர் நாயகம் திணைக்களம்,
வடக்கு வலயம்,
கச்சேரி,



# லூஸி

## இடப்பக்க இரை

ஈழத்து திரைப்பட வரலாற்றில் பல்வேறு காலங்களில் பல்வேறு கருப் பொருட்களைச்சுமந்தும் திரைப்படங்கள் வெளிவந்த வண்ணம் உள்ளன. அந்தவகையில் வெளிவந்த ஈழவாணியின் “லூஸி” திசைப்படம் பேச வேண்டிய திரைப்படமாக அமைகின்றது. ஒரு படத்தின் வெற்றிக்கு இயக்குநர் மற்றும் தொழில்நுட்பவியலாளர்கள் நடிகர்கள் சேர்ந்த கூட்டு முயற்சியே வெற்றியைத் தீர்மானிக்கின்றன. இயக்குநர் தான் நினைக்கும் கருப்பொருளை வெளிக் கொணர நடிகர்களை வேலை வாங்கிக் கொள்ளும் திறனில் தான் படத்தின் வெற்றி பேசப்படுகின்றது. நடிகர்கள் சம்பளத்தினை வாங்கி நடிப்பவர்களாக இல்லாமல் பாத்திரப் படைப்பின் காத்திரம் உணர்ந்து நடிக்கும் இயல்பும் படத்தின் வெற்றிக்கு காரணமாக அமைகின்றது. பின்னனி இசை, பாத்திரப் படைப்புக்களின் காட்சிப்படுத்தல் களம், வெளிப்படுத்துகை என பல்வேறு ஒழுங்கமைப்புக்களையும் கொண்ட ஒரு கூட்டு முயற்சியே படத்தின் வெற்றியைத் தீர்மானிக்கின்றது.

ஈழத்துத் திரைப்பட வரலாற்றில் திரைப் படங்களை தயாரிப்பவர்கள் பெரும் செல்வந்தவர்களாகவோ ஈழத் திரைப் படத்தை சுமந்து செல்வதற்கும் தோள் கொடுப்பதற்கும் செல்வந்தர்கள் பங்காளர்கள் கொண்டவர்களும் அல்ல. ஒரு கூட்டு முயற்சியை கட்டியெழுப்பவும் கட்டியெழுப்பிய விடயத்தில் நிலைபேறாக நின்று அதை முழுமையான ஒரு பெறுபேறுக்கு இட்டுச்செல்வதானது சுலபமான காரியம் அல்ல.

இவ்வாறான தடைகளை உடைத்து அவற்றைச் சமாளித்து முகத்திற்கு நேராக அறைந்து, ஒரு படம் வெளியிடப்படுவது அவ்வளவு இலகுவும் அல்ல. இவற்றைக் கடந்து இயக்குநர் ஈழவாணி ஒரு முழுநீளத் திரைப்படத்தை தயாரித்து வெற்றி கண்டுள்ளார். லூஸி திரைப்படம் பெண்கள் சிறுவர்கள் எதிர்நோக்கும் பாலியல்

திரை விமர்சனம்



விடயங்களை மிகக் காத்திரமாக கூறும் ஒரு படம். காலம் காலமாக பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகளை பேசிக்கடக்கும் பிரச்சனையை திரைப்படமாக்கி எல்லோர் கவனத்தையும் ஈர்த்தது.

கதையின் கரு சிறுமி ஒருத்தி தனது 6 வயதில் மூளைக்காய்ச்சல் நோயினால் பாதிப்படைந்து மூளை வளர்ச்சி குறைந்த பிள்ளையாக தாயின் கவனிப்பு குறைவால் மாற்றம் அடைகின்றாள். இரண்டு பெண் பிள்ளைகளுக்கு தாயான பெண், தந்தையின் இறப்பின் பின் மறுமணம் செய்து கொள்கின்றாள். மறுமணம் செய்த தாய் தன் பிள்ளைகளை மறுமணம் செய்தவரிடம் ஒப்படைத்துவிட்டு பணிப்பெண்ணாக வெளிநாட்டுக்கு பொருளீட்டச் சென்றுவிடுகின்றாள் இரண்டு பெண் பிள்ளைகளில் புத்தி குறைந்தவளான லூஸியா சிறிய தந்தை மூலம் எதிர்நோக்கும் பாலியல் தொல்லைகள் அவளை பாலியல் பலாத்காரம் செய்யும் செயற்பாடுகளை மிகுந்த அருவருப்போடு பதிவு செய்துள்ளாள் ஈழவாணி.

“அக்கா அந்த இடத்தில் மூத்திரம் போக நோகுது புண் புண்ணாக எரியுது”

என ஒரு ஆதரவுக்காக சகோதரியிடம் கூறும் போது அந்த சகோதரி அதை வெளியிலும் சொல்ல முடியாது, என்ன செய்வதென தெரியாது இந்த சமூகத்தின் விமர்சனங்களுக்காக பயன்படுத்துவதையும் அதை மறைப்பதையும் அதற்கு தீர்வுகான முடியாததையும் படத்தில் அம்பலப்படுத்தியுள்ளார் ஈழவாணி. சித்தப்பாவாக நடித்த இருதயன் அவர்களின் நடிப்பு அற்புதம்

லூஸியாக நடித்த பூர்விகாவை பாராட்டாமல் கடக்க முடியாது. அவ்வளவு தத்ரூபமாக இயக்குநரின் கருப்பொருளை சுமந்து நடித்திருக்கின்றார். பிறகு லூஸிக்கு என்ன நடந்தது என்பதை அறியும் ஆர்வம் பலருக்கு இருக்கும் லூஸி லூஸியாகவே இருந்து விடவில்லை.

1. தாயின் கவனிப்பு இல்லாமை
2. சித்தப்பன் கொடுமை
3. தமக்கையின் இயலாமை

இவற்றைக் கடந்து அவள் ஒரு மனுசியாக நடமாடத் தொடங்க, வெளிநாட்டுத் திருமணம் முடித்து தன் வாழ்க்கையை தேடிக்கொள்ளும் அக்கா ஒரு பெண் காப்பகத்தில் தங்கையை பாதுகாப்பாக தங்க வைத்த திருப்தியுடனும் அடிக்கடி அவளுடைய சுகதுக்கங்களை தொலைபேசியில் உரையாடி கேட்டறிவதிலும் திருப்தி கொள்வதில் தன் பொறுப்புணர்வினை வெளிப்படுத்திக் கொள்வதாக தன்னை சமாதானப்படுத்திக் கொள்ளும் இயலாமை வடிவங்களை ஈழவாணி பேசியுள்ளார்.

லூஸி சித்தப்பாவினால் மட்டுமன்றி காதலனாலும் ஏமாற்றப்படுகின்றாள். காதலிப்பதற்காக அந்தக் காதலன் திட்மிட்டுக் கூறும் அநியாயத்திற்கான இரக்க காரணங்களைக் கண்டு திரைப்படத்தை பாத்திருப்போரையும் ஏமாற்றி விடுகின்றார் இயக்குநர் ஈழவாணி. பசப்பு வார்த்தைகள், நடிப்பு, மிகுதி போலிப்பாவனைக்காக பயன்படுத்தம் பெற்றோர் மற்றும் உறவினர்கள் இழப்பு போன்ற காரணங்களைக் காட்டி வழிதவறும் பிள்ளைகள் வஞ்சனையோடு செயற்படும் போலி இரக்க வார்த்தைகளை



புட்டு புட்டு வைக்கின்றார் இதன் மூலமாக ஒரு விழிப்புணர்வினையும் பதிவு செய்திருக்கின்றார்.

1. சித்தப்பாவின் துஸ்பிரயோகம்
2. காதலனால் துஸ்பிரயோகம் செய்ய முனைதல்
3. இன்னொன்று குளிக்கும் பெண்களை எட்டிப்பார்க்கும் வியாதி

முடிவில் தன்னை தற்காத்துக் கொள்ள காதலனை கொலை செய்து கொள்கின்றாள். பத்தில் எல்லா ஆண்களையும் கெட்டவர்களாக சித்தரிப்பது போல ஒரு தோற்றத்தை உண்டு பண்ணி இருந்தாலும், அரிதிலும் அரிதாகவே நல்லவர்கள் இருக்கின்றார்கள் என்பதனை தெளிவுபடுத்தியிருக்கின்றமை சிறப்பு.

ஒட்டு மொத்தத்தில் “லூஸி” லூசியல்ல. விருதுகளுக்கும் பாராட்டுக்களுக்கும் உரிய சிறந்த படைப்பு. முடிவு இயக்குநரின் ஆதங்கம் வன்முறையாளர்களின் துஸ்பிரயோகங்களை கொளுத்த வேண்டுமென்ற ஆதங்கம் அது எல்லோருக்குள்ளும் எரிந்து கொண்டிருக்கும் ஆதங்கமே.

இரகசியமாக புதைத்துவிடுதல் என்பது காலங்காலமாக நடந்து வரும் ஒருவித சமூகப்பயம் கையைப்பிடித்து இழுத்தல், மார்பகங்களைத் தட்டுதல், முகபாவனைகளால் சீண்டுதல், குளிக்கும் போது எட்டிப்பார்த்தல், கமராவில் படமெடுத்தல் என்பவையெல்லாம் துஸ்பிரயோகத்தின் அத்தியாயங்களே இது பிற இடங்களில் மட்டுமன்றி உள்ளகத்திலும் (வீட்டிலும்) பெண்கள் எதிர்நோக்கும் கொடுமைகளே இவை குடும்ப கௌரவம், மானம் என்ற சொற்களுக்காக மறைக்கப்படுதல் இயல்பாகிவிடுகின்றது. ஆனால் அதன் மனத்தாக்கங்கள் தொடர்கதைகளே

இவற்றை மெல்ல உடைத்து வெளிக்காட்டும் கதைகள் நாவல்கள் திரைப்படங்கள் இருந்த போதும் ஈழத்தில் முழுநீளத் திரைப்படமாக வெளிவந்திருப்பது லூஸி திரைப்படம் மட்டுமே.

லதா கந்தையா
பிரதிப்பதிவாளர் நாயகம் அலுவலகம்,
வடக்கு வலயம்.

## தாய்

சரிகைக் கரைக்குள் அடங்கும்
பராயம்
கண்களின் கோடியில்
வயதுக்கு மீறிய
ஆண்டு வளையங்கள்
ஒரு கையில்
சொத்தென்றான்
மகனின் சீருடைப் பராயத்து
புகைப்படம்
மறு கையில்
உயிரைப் பிடித்து வைத்திருக்கும்
வெளிர் நீல மருந்துப்பை
பிள்ளைகளைத் தேடுவோரின்
கூட்டத்தில்
இவள் ஒரு தாய்.

பிரயாந்தி அருமைத்துரை
பிரதேச செயலகம்,
சண்டிலிப்பாய்.